# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பினால் 12 இலட்சம் கோடி ரூபா இழக்க நேரிடும்

## கலாநிதி நிஷான் டி மெல் எச்சரிக்கை

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டினால் எதிர்வரும் 2038 ஆம் ஆண்டுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும், என பொருளியல் துறை சார்ந்த சிரேஷ்ட நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த செவ்வியின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்புக் காரணமாக ஓய்வூதிய நிதியிலிருந்தும் கணிசமான தொகையை இழக்க வேண்டிவரும், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதிய நிதி ஆகியவற்றில் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி நிலவரப்படி பிணைமுறிகள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு சராசரியாக 13.5 வீத வட்டியை அரசாங்கம் பெற்று வந்தது. அதனை 9.1 வீதமாகக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அரச கடன்களுக்கு 13.5 வீத வட்டி வழங்கப்பட்டால், அந்த நிதியின் மதிப்பு 2038 ஆம் ஆண்டாகும்போது 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தற்போது அந்த நிதியின் மதிப்பு 3.456 ட்ரில்லியனாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பினால் 9.1 வீதமாக வட்டியைக் குறைப்பதன் மூலம்



12 ட்ரில்லியன் இழப்பைச் சந்திக்க நேரிடும் என கலாநிதி நிஷான் டி மெல் எச்சரித்துள்ளார்.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 21 புதன்கிழமை 05.07.2023 கதிர் 18



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## மக்களே தமக்கான மின்சாரத்தைத் துண்டிக்கும் நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது - சுனில் ஹந்துன்நெத்தி

எரிபொருள், எரிவாயு வரிசைகள் காணப்படுவதும், மின்சாரம் துண்டிக்கப்படுவதையுமே பிரச்சினைகளாக மக்கள் புரிந்துகொண்டுள்ளனர், என தேசிய மக்கள் சக்தி நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல வாக்காளர்களுக்கு, தாம் வாக்களித்த பின்னர் நடக்கும் விடயங்களை புரிந்துக் கொள்ளவோ சிந்திக்கவோ நேரமில்லை.

எரிபொருள், எரிவாயு வரிசைகள், மின் துண்டிப்பு என்பன இல்லாமல் போன பின்னர் பிரச்சினைகள் முடிந்துவிட்டதாக அவர்கள் எண்ணுகின்றனர். எனினும், அலுவலர்கள் மின்சாரத்தைத் துண்டிப்பதற்குப் பதிலாக, மக்களே தமக்கான மின்சாரத்தைத் துண்டித்துக்கொள்ளும் நிலைமையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால், மக்கள் மின் பாவனையைக் குறைத்துக்கொண்டுள்ளனர், எனவும் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

## தாமதத்தைத் தவிர்க்க தமிழ் நீதியரசர்கள்! சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்து



வடக்கு கிழக்கில் நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள், மேன்முறையீட்டுக்காக கொழும்புக்கு வரும்போது, அவற்றுக்கான மொழிபெயர்ப்பிற்கு மட்டும் இரண்டுவருட காலங்கள் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர்

2➤

## இலங்கையில் விபத்துக்களால் தினந்தோறும் 35 பேர் மரணம்!

இலங்கையில் நாளொன்றுக்கு 32 முதல் 35 பேர் வரையில் விபத்துக்களால் மரணிக்கின்றனர். வாகன விபத்துக்கள், தற்கொலைகள், நீரில் மூழ்குதல், வீழ்தல் மற்றும் மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் குறித்த மரணங்கள் சம்பவிக்கின்றன என்று தேசிய விபத்துத் தடுப்பு மற்றும் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் முகாமையாளர் விசேட வைத்தியர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

இலங்கையில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்துக்கும் ஒருமுறை விபத்துக்கள் காரணமாக நான்கு பேர் வரையில் மரணிக்கின்றனர். விபத்துக்களால் வருடமொன்றுக்கு 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் அரச வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

வருடமொன்றில் பத்தாயிரம் முதல் பன்னிரண்டாயிரம் பேர் வரையில் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். அதாவது, நாளொன்றுக்கு 32 முதல் 35 பேர் வரையில் விபத்துக்களால் மரணிக்கின்றனர்.

வாகன விபத்துகள், தற்கொலைகள், நீரில் மூழ்குதல், வீழ்தல் மற்றும் மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் குறித்த மரணங்கள் சம்பவிக்கின்றன. இது மிகவும் மோசமான நிலைமையாகும். எனவே, இதனைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதே அவசியமாகும், என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## ஜப்பானின் உத்தேச இலகு ரயில் திட்டம் அமைச்சரவை இன்று அனுமதியளித்தது



ஜப்பானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் உத்தேச இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தினைத் தெரிவித்தார்.

உத்தேச இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான உடன்படிக்கையை எட்டுவதற்கு ஏற்ற காலக்கெடுவைத் தயாரிப்பதற்காக கொழும்பில் உள்ள ஜப்பானிய இராஜதந்திர தூதரகத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

கோட்டபாய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், அவரது ஆலோசனையின் பேரில் உத்தேச கொழும்பு இலகு ரயில் சேவை திட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்கும் முடிவு 2020 செப்டெம்பரில் எடுக்கப்பட்டு, அதற்கு

2➤

## கொத்து ரொட்டி, ப்ரைட் ரைஸ் விலை 10 வீதத்தால் குறைப்பு!

கொத்து ரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியவற்றின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நூற்றுக்கு 10 வீதத்தால் விலை யைக் குறைப்பதாக, அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தற்போது கொத்து ரொட்டியானது 500 ரூபா முதல் 1300

2➤

## நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதியில்லை - சபாநாயர்

நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்க முடியாது, என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதாச, உள்நாட்டு கடன் சீரமைப்பு குறித்து அரச அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பும் நோக்கில் தாம் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றதாகவும், குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு கடன் மறுசீரமைப்பில் ஏற்படக்கூடிய தாக்கம் குறித்து அறிந்து கொள்ளவே தாம் கூட்டத்தில் பங்கேற்றதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அனுமதி வழங்கப்படாவிட்டால் தாம் தனியான குழுவை அமைத்து, அரச அதிகாரிகளை அழைத்து கேள்வி எழுப்பப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அரசாங்க அதிகாரிகள் தமது கேள்விக்கு பதில் அளிக்கத் தவறினால் அது தனது

2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# காணிகளை விடுவிக்குமாறு கோரி முல்லையில் மக்கள் போராட்டம்!




முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, காணி உரிமையாளர்களினால் இன்று போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கேப்பாப்பிலவு இராணுவ முகாமிலிருந்து பேரணியாக ஆரம்பமாகி, கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும், இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தி பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் தங்களின் எண்ணத்தினை வெளியிட்டனர்.

# இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஸ்தாபிக்க ஆர்வம் காட்டும் சீனாவின் சினோபெக்

கொழும்பு, ஜூலை 05

சீனாவின் சினோபெக் நிறுவனம், இலங்கையில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதில் ஆர்வம் காட்டுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் சினோபெக் நிறுவனத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்புத் துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு சீனா துறைமுக பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விருப்பம் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கரும்புலிகள் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கரும்புலிகள் நாள் நினைவேந்தல் இன்று புதன்கிழமை காலை உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் கரும்புலிகளின் நினைவுருவப் படத்திற்கு மாணவர்களால் ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலியும், ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு தேவிபுரம் பிரதேசத்திலும் இன்று கரும்புலிகள் நாள் நினைவு உணர்புபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் தேச விடுதலைக்காக போராடி தன் இன்னுயிரை தற்கொடை செய்த மாவீரன் கப்டன் மில்லரோடு ஆரம்பமானது கரும்புலிகள் நாள். வருடம் தோறும் ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் தினமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது.

# பலத்த காற்றினால் கண்டி பிரதான வீதியில் மரம், மின்கம்பம் முறிந்து போக்குவரத்து தடை

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி பிரதான வீதியில் பலத்த காற்றினால், மரமொன்றும் மின் கம்பமொன்றும் முறிந்து விழுந்துள்ளன. இதனால், அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டதோடு, அனைத்து வாகனங்களும் மாற்றுவழியூடாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் குறித்த மரமும் மின் கம்பமும் முறிந்து விழுந்துள்ளதாகவும் இதன்போது எவருக்கும் காயமேற்படவில்லை எனவும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பிரதேசவாசிகள் இணைந்து, வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தினை வெட்டி அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். நுவரெலியா பிரதான நகருக்கு மின் இணைப்பை வழங்கும் கம்பம் முறிந்து விழுந்தமையால், பிரதான நகருக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக அப்பகுதிக்குப் பொறுப்பான மின்சார சபைக்கு உடனே அறிவித்து, பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, முறிந்த மின்கம்பத்தை மாற்றி ஏற்பட்டுள்ள பழுதை சரி செய்யவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சியாக சீரற்ற கால நிலை நிலவுவுதால், பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா இடர் முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

# வன்னி இராணுவத் தலைமைகத்துக்கு முன்பாகத் தீக்குளிக்க முயன்ற பெண்!

## காப்பாற்றிய வவுனியா பொலிஸார்

வவுனியாவில் ஏ - 9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் இன்று காலை மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்ற நிலையில் வவுனியா பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

குருநாகல், வரக்காபொல பகுதியில் வசித்து வரும் 34 வயதுடைய குறித்த பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இவர்களின் குடும்பத்தினுள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு பிள்ளைகளையும் தந்தை அழைத்துச் சென்ற நிலையில், இரு தரப்பினரும் சில மாதங்களாகப் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், குறித்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கும் வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் குடும்பஸ்தரான இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனினும், சில வாரங்களாக குறித்த இராணுவச் சிப்பாயின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், விரக்தியடைந்த அந்தப் பெண், அவரைத் தேடி வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்குச் சென்றபோதிலும், குறித்த இராணுவச் சிப்பாயைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்தப் பெண், இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாகத் தீக்குளிக்க முற்பட்ட வேளை வவுனியா பொலிஸாரால் அவர் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# சத்தரதன தேரருக்கு விளக்கமறியல் நீடிப்பு



மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளைப் பரப்பிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட ராஜாங்கனையே சத்தரதன தேரருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு இன்று கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தாமதத்தைத் தவிர்க்க .....

சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றில் இடம்பெற்றுவரும் நீதிமன்றங்களில், நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகள் மேன்முறையீட்டுக்கு வரும்போது, தமிழ் நீதியரசர்கள் அவற்றினை ஆராய வேண்டும். அல்லது, வடக்கு கிழக்குக்கு என பொதுவான மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவற்றில் எதாவது ஒன்றினையாவது நடைமுறைப்படுத்துவதன் மூலம், நீதிமன்ற விசாரணைகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்கலாம், என அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## கொத்து ரொட்டி, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் ப்ரைட் ரைஸ் 350 ரூபா முதல் 1900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும் பசும்பால், பால்மா கலவையுடனான தேநீர் மற்றும் தேநீர் ஆகியவற்றின் விலையில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானின் உத்தேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றப்பட்டிருந்தது.

அதற்கு முன்னைய அரசாங்கத்தால், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஜப்பானிய நிதியுதவியுடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இது, கொழும்பு கோட்டையிலிருந்து மலாபே வரை 16 ரயில் நிலையங்களுடன் 17 கி.மீ நீளமுள்ள இலகுரக ரயில் போக்குவரத்து முறை மூலம் போக்குவரத்துத் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றக் குழுக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமையை மீறும் வகையிலானது எனவும் அவ்வாறு சிறப்புரிமை மீறப்பட்டால் அதற்கு சபாநாயகரே பொறுப்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட வேண்டாம் எனவும் அவர் சபாநாயகரிடம் கோரியுள்ளார். அதனையடுத்து, அரச அதிகாரிகளை அழைத்து கேள்வி எழுப்ப அனுமதி வழங்குவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக் குறித்து, நாடாளுமன்றின் பொது நிதிக் குழுவில் நடைபெற்ற கூட்டத்தில் சஜித் பிரேமதாச பங்கேற்று இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com

# அம்பாறை – மல்வத்தையில் மதுபானசாலை வேண்டாம் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்திய கிராம மக்கள்!





( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தை கிராமத்தில் புதிதாக மதுபான சாலையொன்றைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதியில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இன்று புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தனர்.

மல்வத்தை பூர்வீகத் தமிழ்க் கிராமத்தை அழிக்க திட்டமிட்ட சதி!, மதுபானசாலையை அமைக்க நாம் இடம் தரமாட்டோம்!, உட்பட பல்வேறு வாசகங்கள் ஏந்திய பதாதைகளைச் சுமந்தவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அம்பாறை நகரில் ஐந்து மதுபானசாலைகள் இருக்கின்ற நிலையில், மல்வத்தை கிராமத்தில் மதுபானசாலை எதற்கு? என்று அவர்கள் கேள்வியெழுப்பினர்.

மல்வத்தை பிரதான வீதியிலுள்ள நாற்சந்திக்கு பேரணியாக வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுட்டனர். தகவல் அறிந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அங்கு சென்று கலந்து கொண்டதுடன், மக்களின் மகஜரையும் பெற்றுக்கொண்டார்.

பொதுமக்கள் சேர்ந்து தயாரித்த மகஜர், அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் பொலிஸ் பொறுப்பதிகாரி, மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பழம்பெரும் சிறிய கிராமமான மல்வத்தை கிராமத்தில், ஒரு பிரதேச சபை வசதியோ, ஒரு சதொச நிலையமோ, எரிபொருள் நிலையமோ இல்லாதுள்ள நிலையில் மதுபான சாலை மட்டும் அமைக்கக் காரணம் என்ன?, எனக் கேள்வியெழுப்பிய அப்பகுதி மக்கள், கூலித் தொழிலாளர்கள் நிறையவே உள்ள தமிழ் மக்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் மேலும் மக்களின் வாழ்க்கையை அழிக்க மதுபான சாலை வழிவகுக்கும், என்றும் சுட்டிக்காட்டினர்.

## புலிகளை மீளுருவாக்க முயற்சித்த வழக்கு செப்டெம்பருக்கு தவணையிட்டது மன்று

கிளிநொச்சி, ஜூலை 05

கிளிநொச்சியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள வைத்தியர் சின்னையா சிவரூபன் தொடர்பான வழக்கின் சாட்சியங்களை பதிவு செய்வதற்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளுக்கு நீதிமன்றால் தவணையிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கடந்த 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி வைத்தியர் சின்னையா சிவரூபன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவர் தொடர்பான வழக்கு இன்று கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.ஏ. சகாப்தீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது வைத்தியர் சின்னையா சிவரூபனும், குறித்த வழக்கின் இரண்டாவது சந்தேக நபரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது இராணுவ மேஜர் தர அதிகாரியின் சாட்சியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதற்காக இன்று வழங்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதும் அவர் நீதிமன்றுக்குச் சமூகமளிக்காத நிலையில் வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள வைத்தியர் சின்னையா சிவரூபன், ஒவ்வொரு சனிக்கிழமையிலும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் கையொப்பமிட்டு வரும் நிலையில், மாதத்தில் இறுதி சனிக்கிழகைளில் ஒப்பம் இடுவதற்கான விண்ணப்பத்தினை சட்டத்தரணிகள் ஊடாக முன் வைத்திருந்தார். அதையடுத்து, மாதத்தில் இறுதி சனிக்கிழமைகளில் கையொப்பமிடுமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

பளை கரந்தாய்ப் பகுதியிலும், தாளையடி கடற் பரப்பில் பாறை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலும் மீட்கப்பட்ட வெடி மருந்துகளுடன் தொடர்புபட்டவர் எனவும், விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம் செய்ய முற்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு, இராணுவப் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்ட குறித்த மருத்துவர் பின்னர் பயங்கரவாதத் தடுப்பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது, கடந்த பெப்ரவரியில், கைதான இருவரையும் 50,000 ரூபா காசு மற்றும், ஒவ்வொருவருக்கும் இருபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து சரீரப் பிணைகளில், கடும் நிபந்தனையுடன் பிணையில் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வரணி சுட்டிபுரத்தில் விபத்து இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

வடமராட்சி தேவராளி பகுதியில் மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த விபத்து நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய புஸ்பராசா ராஜ்குமார் என்ற இளம் குடும்பத்தரே உயிரிழந்திருக்கிறார். குறித்த நபருக்கு திருமணமாகி ஒரு வருடமாகின்ற நிலையில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இறந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நூல் வெளியீடு

நூலியலாளர் என். செல்வராஜா எழுதிய 'மட்டக்களப்பில் பொலிவு பெறும் பொதுசன நூலகம்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## முறைப்பாட்டுக் குறிப்பேடு எரித்தழிப்பு பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநிறுத்தம்

அகரபத்தனை பொலிஸாரின் முறைப்பாட்டுக் குறிப்பேட்டின் பக்கங்களை எரித்து அழித்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த புத்தகத்தை அழிக்குமாறு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு அந்த பொலிஸ் சார்ஜன்ட் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் அந்தக் குறிப்பேட்டை பெண்கள் விடுதிக்கு எடுத்துச்சென்று அதன் பக்கங்களை அகற்றி, பலவற்றை எரித்துள்ளதாக அகரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு குறிப்பேட்டுப் பக்கங்களை அழித்த குற்றத்திற்காக அந்த சார்ஜன்ட், நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## அஸ்வெசும பயனாளிகள் தெரிவு நடவடிக்கை எதுவித பாரபட்சமுமின்றி நடைபெறவேண்டும்!

### அம்பாறை மாவட்ட சிவில் அமைப்புகள் வலியுறுத்து



(நூருல் ஹுதா உமர்)

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள அஸ்வெசும சமூக நலன்புரி உதவித் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் காணப்படும் குறைபாடுகள் முறையாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும், என சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

காரைதீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தில் இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமையில் நடைபெற்ற சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பின் சந்திப்பில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நலன்புரி உதவித் திட்டமானது பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் பாகுபாடில்லாது வழங்கப்பட வேண்டும், எனவும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தின் பின்னர், இருபதுக்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகள் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளன.

## பிரான்ஸின் தேசிய தினக் கொண்டாட்டம் இந்தியப் பிரதமர் மோடி பங்கேற்கிறார்



பிரான்ஸின் தேசிய தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் மோடி பிரான்ஸிற்குச் செல்லவுள்ளார்.

இந்த நிலையில், இந்திய இராணுவத்தினர் பிரெஞ்சு படையினருடன் அணிவகுப்பில் பங்கேற்க வேண்டும் எனவும், அணிவகுப்பில் ரபேல் விமானங்களும் வர வேண்டும் என்றும் பிரான்ஸிக்கான இந்தியத் தூதர் லெனாயின், இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட நாளாக பிரான்ஸ் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. பிரான்சுக்கும் இந்தியாவுக்குமான நட்புறவின் வெள்ளிவிழா ஆண்டாகவும் இது அமைந்துள்ளது.

இதனிடையே, இந்தப் பயணத்தின்போது பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோனுடன் இந்தியப் பிரதமர் மோடி நடத்தவுள்ள பேச்சுவார்த்தையில் தொழிநுட்ப வளர்ச்சி சார்ந்த விடயங்கள் முன்னிலை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## கேரளாவில் தொடரும் மழையால் சிக்கிய இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மீட்பு

கேரளா மாநிலத்தில் கடந்த 2 நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால், பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. பம்பை - அச்சன்கோவில் ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால், மாவட்டம் தோறும் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன. கனமழையால் பல இடங்களில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கனமழை காரணமாக கேரளாவில் உள்ள 6 மாவட்டங்களில் பாடசாலைகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கேரள மாநிலத்தில் முண்டக்காயம் சென்னாப்பாறை இறப்பர் தோட்டத்தில் உள்ள ஓடையில் கனமழையால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பெருக்கெடுத்து ஓடிய தண்ணீரைக் கடக்க முடியாமல் இறப்பர் தோட்டத்தில் தொழிலாளர்கள் சிக்கியிருந்தனர். தகவல் அறிந்து அங்கு வந்தவர்கள், இரு கரைக்கும் இடையே கயிறு கட்டி தொழிலாளர்களைப் பத்திரமாக மீட்டுள்ளனர்.

## ஜப்பானின் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது ஐக்கிய நாடுகள் கண்காணிப்பு அமைப்பு

சுனாமியால் சிதைந்த புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து கழிவு நீரை கடலில் விடுவதற்கான ஜப்பானின் திட்டம் சர்வதேச தரத்திற்கு உட்பட்டது, என ஐக்கிய நாடுகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வெளியீடு சுற்றுச் சூழலில் மிகக் குறைவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சர்வதேச அணுசக்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. இதனிடையே, அணு உலைகளை குளிர்விக்கப் பயன்படுத்தப்பட்ட நீர் சேமிப்பு இடம் இல்லாமல் புகுஷிமா வளாகம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானின் இந்த திட்டத்திற்கு சீனா மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இது தங்களின் நற்பெயருக்கு மேலும்பாதிப்பை ஏற்படுத்தும், என்று ஜப்பான் உள்ளூர் மீனவ சமூகங்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

## ஆப்கானிஸ்தானில் தொடரும் உணவு நெருக்கடி பத்தாயிரம் தொன் கோதுமை வழங்கியது இந்தியா

ஆப்கானிஸ்தானில் நிலவும் பொருளாதாரச் சிக்கலின் காரணமாக கடும் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. உணவுப் பற்றாக் குறையால் தவித்து வரும் ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு உதவும் விதமாக, இந்தியா சமீபத்தில் 10,000 மெட்ரிக் தொன் கோதுமையை வழங்கியிருக்கிறது.

தனது டுவிட்டர் பதிவில் இச் செய்தியை உறுதிப்படுத்தியுள்ள ஐ.நா. உணவு அமைப்பு, இந்தக் கோதுமை அந்நாட்டின் ஹெராத் நகரை அடைந்ததாகவும் தெரிவித்திருக்கிறது.

கடந்த மாதம், ஈரானின் சபஹர் துறைமுகம்வழியாக, மனிதாபிமான அடிப்படையில், இந்திய அரசாங்கம் 20,000 மெட்ரிக் தொன் கோதுமையை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக, அந்நாட்டிற்கு பாகிஸ்தானின் நில எல்லை வழியாக இந்தியாவிலிருந்து 40,000 தொன் கோதுமை வழங்கப்பட்டது.



உலக உணவுத் திட்ட மதிப்பீட்டின்படி, தீவிரமான உணவுப் பாதுகாப்பின்மை உள்ள நாடுகளில் ஆப்கானிஸ்தானும் ஒன்றாகும். அங்கு 90 லட்சம் மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியாலும், பசியாலும் வாடுகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் ஒகஸ்ட் 2021இல் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, அங்கு சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு பெண்கள் பாடசாலைகளுக்குச் செல்வதைத் தடை செய்திருக்கும் தலிபான்கள், கடந்த டிசம்பரில் பெண்கள் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கும், தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுவதற்கும் தடை விதித்திருந்தது

ஆனால், பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்து வருவதால், பிற நாடுகளின் உதவியை அந்த நாடு எதிர்பார்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




## நேட்டோ உச்சி மாநாட்டுக்காக படைகள் லிதுவேனியாவுக்கு அனுப்பும் போலந்து

உலகின் மிகப்பெரிய இராணுவ கூட்டமைப்பான நேட்டோ 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் கொள்கையை அறிமுகப்படுத்தவும், புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் அவ்வப்போது நேட்டோ உச்சி மாநாடு நடத்தப்படுகிறது.

அதன்படி வருகிற 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் லிதுவேனியா தலைநகர் வில்னியசில் நேட்டோ உச்சிமாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் உறுப்பு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொள்வதால் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் லிதுவேனியா உள்ளது.

எனவே, வருகிற 17 ஆம் திகதி வரை அங்கு சிறப்புப் படைகளை நிறுத்துவதற்கான ஒப்பந்தத்தில் போலந்து அதிபர் அண்ட்ரேஜ் டுடா கையெழுத்திட்டுள்ளார். இந்தச் சிறப்பு படைப்பிரிவில் 75 க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் கொண்ட பிரிவு, எம்.ஐ-17 ஹெலிகொப்டர்கள் உள்ளிட்டவை அடங்கும். இவை லிதுவேனியா வான்பாதுகாப்பை உறுதிசெய்வதோடு, பொதுமக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் என போலந்து அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## காலிஸ்தான் ஆதரவாளர்களின் சுவரொட்டி மிரட்டல் கனடா தூதரை நேரில் அழைத்து இந்தியா கண்டனம்




கனடாவில் உள்ள இந்தியத் தூதர அதிகாரிகளை அச்சுறுத்தும் வகையில் அவர்களது பெயர்களுடன் கூடிய சுவரொட்டிகளை காலிஸ்தான் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ளனர். இந்த மிரட்டல் விவகாரம் தொடர்பாக இந்தியாவுக்கான கனடா தூதரை நேரில் அழைத்து கண்டனம் வெளியிட்டதாக இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் சீக்கியர்கள் அதிகம் வாழும் பஞ்சாப் மாநிலத்தை 'காலிஸ்தான்' என்ற பெயரில் தனிநாடாக அறிவிக்கவேண்டுமென பிரிவினைவாத அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. காலிஸ்தான் ஆதரவாளர்கள் என அழைக்கப்படும் இவர்கள் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கனடாவில் உள்ள இந்தியத் தூதர அதிகாரிகளை அச்சுறுத்தும் வகையில், அவர்களது பெயர்களுடன் கூடிய சுவரொட்டிகளை காலிஸ்தான் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ளனர். இது அங்கு பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இதே வேளை, அவுஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளுக்கும் காலிஸ்தான் ஆதரவாளர்களால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இந்தியத் துணைத் தூதரகத்தில் பணியாற்றும் மன்ப்ரீத் வோரா, தூதரக அதிகாரி சுஷில் குமார் ஆகியோருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலிஸ்தான் இயக்கத்தைச் சேர்ந்த நிஸார் என்பவர் படுகொலை செய்யப்பட்டமைக்கு இவர்கள்தான் காரணம் என்ற வசனங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் இந்த இரண்டு அதிகாரிகளுடன் படங்களுடன் அவுஸ்திரேலியாவின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

# நயினாதீவு நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி 50 வருட சேவைக்காலக் கௌரவிப்பு நிகழ்வு இன்று





யாழ்ப்பாணம் - நயினாதீவில் அமைந்துள்ள நாக தீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நயினாதீவுக்கு வந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு சர்வமதப் பிரமுகர்களது பங்கேற்புடன் கௌரவிப்பு நிகழ்வு, நயினாதீவு மேகலை அரங்கத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இலங்கையின் நான்கு பிரதான பௌத்த பீடங்களின் தேரர்கள் மற்றும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு உள்ளிட்ட சர்வமதத் தலைவர்களின் பிரசன்னத்துடன் நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

விகாரையில் இடம்பெற்ற பூசைகளுடன், விழா நாயகனான விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ தவில் நாதஸ்வர இசையுடனும், கண்டிய நடனத்துடனும் மண்டபத்திற்கு செங்காவி விரிப்பில் அழைத்து செல்லப்பட்டார்.

அதன்போது வீதியில் இரு மருங்கிலும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கூடி, விகாரதிபதிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் நூற்றுக் கணக்கான பௌத்த பிக்குகள், நயினாதீவு மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நயினாதீவு மண்ணில் சேவை புரிய தனது பதினோராவது வயதில் அங்கு வந்த நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், 50 வருடங்களாக நயினை மண்ணிற்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் பெரும் சேவையை கௌரவிக்கும் வகையில் நயினாதீவு மக்களால் குறித்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

## ஹோட்டல் அறையிலிருந்து யுவதி ஒருவரின் சடலம் மீட்பு

இறக்குவானை - மாதம்பை பகுதியிலுள்ள ஹோட்டல் அறைக்குள் மர்மமாக உயிரிழந்த யுவதி ஒருவரின் சடலம், நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது என்று இறக்குவானைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறக்குவானையைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவரும், 22 வயதுடைய யுவதி ஒருவரும் ஹோட்டல் அறைக்குச் சென்றுள்ளனர். இதன்போது குறித்த யுவதியை அறைக்குள் விட்டு, அந்த இளைஞர் வெளியில் சென்று மீண்டும் ஹோட்டல் அறைக்குத் திரும்பியுள்ளார்.

இவ்வாறு மீண்டும் இளைஞர் அறைக்கு வரும்போது, அறை உள்பக்கமாக மூடப்பட்டிருந்துள்ளது. அறையைத் திறப்பதற்கு குறித்த இளைஞர் முயற்சி செய்துள்ளார். எனினும், அறையைத் திறக்க முடியாததை அடுத்து, அவர் ஹோட்டல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார். இதையடுத்து, ஹோட்டல் ஊழியர் ஒருவரின் உதவியுடன் யன்னல் வழியாகப் பார்த்தபோது, யுவதி தூக் கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

யன்னல் வழியாக உள்ளே சென்ற இளைஞர், யுவதியை மீட்டு கஹவத்தை வைத்தியசாலையில் சேர்த்துள்ளார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளர் என்று வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அறிவுறுத்தலை மீறும் உணவக புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட வேண்டுகோள்



உணவுகளின் விலை இன்று முதல் குறைக்கப்பட்டுள்ள நிலையில், விலைக்குறைப்புச் செய்யாத உணவகங்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடுமாறு நுகர்வோருக்கு இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

கொத்துரொட்டி மற்றும் பிரைட் ரைஸின் விலைகளைக் குறைக்காத உணவகங்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுமாறு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டல் துறைக்கு மின் கட்டணம் 27 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. மறுபுறம், ஐந்தாயிரம் ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட சமையல் எரிவாயுவின் விலை, 2900 ரூபாய் அளவில் குறைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் கொத்துரொட்டி மற்றும் பிரைட் ரைஸின் விலைகளை 10 வீதத்தால் குறைக்க தாம் தீர்மானித்துள்ளோம், என அவர் தெரிவித்துள்ளார்.

இது இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும். எனவே, நுகர்வோர் இன்று முதல் இந்த விலைக்குறைப்புடன் இவற்றைக் கொள்வனவு செய்ய முடியும். அதையும் மீறி, ஏதேனும் ஓர் உணவகத்தில் பழைய விலையில் இவை விற்கப்பட்டால், அந்த உணவகத்தின் புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பதிவிடுங்கள்!, என்று நுகர்வோரிடத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.




## ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றப் புலனாய்வினரால் விசாரணை!

### தொழிற்சங்க சம்மேளனம் கண்டனம்



ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அவர், கடந்த மே மாதம் 29 ஆம் திகதி மருதானை சமூக கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றின்போது தெரிவித்திருந்த விடயங்கள் தொடர்பாக வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளவே இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு விசாரணை மேற்கொண்டிருப்பது ஊடகங்களை அடக்கும் மற்றுமொரு நடவடிக்கையாகும், என ஊடக சேவை தொழிற்சங்கச் சம்மேளனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் ஊடக ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலம், சமூக வலைத்தள ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் போன்ற பல அடக்குமுறைச் சட்டமூலங்கள் பிரேரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலேயே ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் காலை 10.30 க்கு அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு விசாரணைக்காகச் சென்றிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக, ஊடக சேவை தொழிற்சங்க சம்மேளனம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து விசாரணை மேற்கொண்டிருப்பது ஊடகங்களை அடக்கும் மற்றுமொரு நடவடிக்கையாகும்.

சில மாதங்களுக்கு முன்னரும் இவர் குற்றப்புலனாய்வு விசாரணைத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பதோடு, இவர் இவ்வாறு அழைக்கப்படுவது இது மூன்றாவது தடவையாகும்.

அதனால், ஊடகவியலாளர தரிந்து உடுவரகெதர குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டதானது கருத்துத் தெரிவிக்கும் அடிப்படை உரிமைக்கு எதிரான செயலாகவே காண்கிறோம், என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2023இல் வெளியிடப்பெற்றது.